Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12



கடந்த 7.9.2012 அன்று
எனது தகப்பனார்
திரு. சூரியகாந்தி அவர்கள்
கர்த்தருக்குள்
நித்திரை அடைந்தார்



ஆட தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881

www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy



# இனி எக்காளம்

VOL . 6 ISSUE . 3 தனிப்பிரதி ரூ 20/= நவம்பர் 2012



# யாருக்கு கொடுப்பது?



## நிஜா கென்னடி

கர்த்தருடைய வார்த்தை கொடுப்பதைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதைக் காண்போம். ஏழை, எளிய ஜனங்களுக்கும், தேவையோடு இருப்பவர்களுக்கும், ஒன்றுமில்லாதவர்களுக்கும் கர்த்தருடைய ஊழியங்களுக்கும், ஊழியக்காரருக்கும் கொடுக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையின்படி நாம் கொடுக்கும்போது கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதம் கடந்துவரும்.

### ஏழைகளுக்கு கொடுத்தல்

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்** (நீதிமொழிகள் *19:17*). நாம் கஷ்டப்படும் ஏழை,எளியவர்கள்மேல் இரக்கப்பட்டு, அவர்களுக்கு கொடுப்பதை கர்த்தருக்கு கடன் கொடுப்பதாகக் கூறுகிறார். நாம் அவர்கள்மேல் தயவாய் இருந்ததினால், கர்த்தர் அவற்றைத் திரும்பித் தருவார். **கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான், அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்** (நீதிமொழிகள் *22:9*). நாம் தாராளமாக கொடுக்கும்போதும், நம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளும்போதும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

**வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்** (சங்கீதம் *112:9*). கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளின்படி நடக்கிறவன் இரக்கக்குணம் உள்ளவனாய் இருப்பான். அவன் பணத்தை நம்பாமல் கர்த்தரை நம்பியிருப்பதால் மற்றவர்களுக்கு உதாரத்துவமாய் கொடுப்பான். **உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்** என்ற வார்த்தையின்படி நாமும் ஏழைகளுக்கு தாராளமாக உதவி செய்யும்போது, நன்மைகளை பெற்றுக் கொள்வோம்.

**தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்** (நீதிமொழிகள் *28:27*). நாம் தேவையோடு இருக்கும் ஜனங்களை அடையாளம் கண்டு கொண்டு, அவர்களின் தேவைகளை சந்திக்க வேண்டும். அவர்களை புறக்கணித்து ஒதுக்கக்கூடாது. ஏழைகளுக்கு உதவி செய்யும்போது, நமக்கு தேவையான அனைத்து ஆசீர்வாதங்களையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்வோம். **வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு** (நீதிமொழிகள் *11:24*). நாம் தாராள மனதுடன் கொடுப்பவர்களாய் இருக்கும்போது, செல்வச் செழிப்புள்ளவர்களாய் மாறுவோம். ஆனால், கஞ்சத்தனம் பண்ணி, யாருக்கும் கொடுக்காமல் தானும் அனுபவிக்காமல் சேர்த்து வைப்பவர்கள், கடைசிவரை வறுமையோடுதான் இருப்பார்கள். இயேசு கிறிஸ்துவை முழுமையாக அறியாத, உலகப் பிரகாரமான மக்கள், மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, தனக்குள்ள பணம் குறைந்துவிடும், தங்களுக்கு ஒன்றும் இருக்காது என்று நினைக்கிறார்கள். யாருக்கும் கொடுக்காமல், பிசினித்தனம் பண்ணி, சேர்த்து வைத்திருப்பவர்கள் ஐசுவரியவானாகலாமென்று உலகத்தார் கூறுவார்கள். தேவையோடு இருப்பவர்களின் தேவைகளை சந்தித்து, அவர்களுக்கு கொடுக்கிறவர்களாய் இருப்பவர்கள் அபரிதமாய் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. சிலர் மற்றவர்களிடமிருந்து வாங்குகிறவர்களாய் இருப்பார்களெயொழிய யாருக்கும் ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். நாம் மற்றவர்களுக்கு கொடுக்கும்போதுதான் பெற்றுக் கொள்வோம். நம்மிடம் இருக்கும் பணம், ஆஸ்திகள் எல்லாம் கஷ்டப்படும் ஜனங்களுக்கும், தேவையிலிருப்பவர்களுக்கும் உதவி செய்வதற்காகவே என்பதை உணர்ந்து சந்தோஷத்தோடு கொடுக்க வேண்டும்.

**முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன்** (யோபு *29:12*). யோபு தன் வாழ்நாள் முழுவ தும் ஏழைகளுக்கு கொடுக்கிறவனாய், உதவி செய்கிறவனாய் இருந்தான். ஏழைகளுக்கு உதவி செய்ய அவன் மறுத்ததேயில்லை. சுயநலமில்லாதவனாக இருந்தான். அநாதைகளுக்கு ஆகாரத்தையம், வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரத்தையும் கொடுத்தான். அவன் பணத்தை நம்பாமல், எப்போதும் கர்த்தரையே நம்பியிருந்தான். அதனால்தான் அவனால் கொடுக்க முடிந்தது. பணத்தை நம்புகிறவர்கள் மற்றவர்களுக்கு கொடுக்கமாட்டார்கள்.

### தேவையோடு இருப்பவர்களுக்கு கொடுத்தல்

**உன் தேவனாகிய கர்த்தர், உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை முடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாகத் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன் கொடுப்பாயாக** (உபாகமம் *15:7,8*). தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். நாம் சுயநலத்தோடு இருந்து அவர்களுக்கு கொடாமல், நம் இருதயத்தை அடைத்துக் கொள்ளும்போது, நம்முடைய ஆசீர்வாதத்திற்கு நாமே தடையாகிவிடுகிறோம். அது நமக்கு பாவமாயிருக்கிறது. அவர்களுக்கு உதவ மறுக்காமல் தேவையானதைக் கொடுத்து உதவவேண்டும்.

**உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன்மேல் வன்கண் வைக்காதபடிக்கும், அவன் உன்னைக்**

குறித்துக் கர்த்தரை நோக்கி அபயமிடாத படிக்கும் எச்சரிக்கையாயிரு:அப்படிச் செய்வாயானால் அது உனக்குப் பாவமாயிருக்கும். அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார். உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையை தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் (உபாகமம் 15:9-11).

தேவையோடிருக்கிறவர்களை கண்டுபிடித்து, அவர்களின் தேவைகளை கேட்டு அறிந்து, அதை நிறைவு செய்கிறவர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஜனங்களுக்கு உதவி செய்யாமல் நாம் ஒளித்துக் கொள்ளக் கூடாது. விசுவாசிகளோ, ஊழியம் செய்பவர்களோ இன்ன தேவையோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்திருந்தும் அறியாதவர்கள்போல் இருந்து, நம் இருதயத்தை அடைத்துக் கொள்ளக் கூடாது. இது கர்த்தருக்கே உதவி செய்யாதது போலாகிறது.

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 25:40). இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் எல்லோரும் சகோதர சகோதரிகளாய் இருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை பின்பற்றுகிறவர்களுக்கு, சிறிய உதவி செய்தால்கூட, அதற்கேற்ற பலனை பெறுவான். சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்த சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் (மத்தேயு 10:42). ஒரு சகோதரனாவது, சகோதரியாவது தேவையோடு இருக்கும்போது, அவர்களுக்கு ஒரு உதவியும் செய்யாமல் கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார். உனக்கு இருக்க இடத்தையும், அனுதின தேவைகளையும் கர்த்தர் சந்திப்பார் என்று சொல்லிவிட்டு, அவனுக்கு ஒன்றும் கொடாமல் இருந்தால் தேவ அன்பு அவனுக்குள் இல்லை (1 யோவான் 3:17). நாம் வார்த்தையினால் அல்ல, நம் செயல்களினால் அன்பு செலுத்த வேண்டும்.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் வீட்டு வாசல் அருகே லாசரு என்னும் ஏழை இருந்தான். அவன் உடல் முழுவதும் புண்ணாக இருந்தது (லூக்கா 16:19,20). லாசரு, ஐசுவரியவானுடைய வீட்டில் மீதியாக உள்ள உணவு துணிக்கைகளை உண்பதற்கு ஆசையாய் இருந்தான். லாசரு மரித்து, பரதீசுக்கு கொண்டு போகப்பட்டான். ஐசுவரியவான் மரித்து, பாதாளத்திலே வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தான். ஐசுவரியவான் தன் கண்முன் தேவையோடு இருந்த ஏழை லாசருவுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், சுயநலமுள்ளவனாய் இருந்தான். நாமும் நம் கண்முன் இருக்கிறவர்களுக்கும், அறிந்தவர்களுக்கும் உதவி செய்யாமல் இருக்கிறோமா?

மிகுந்த ஆஸ்தியுள்ள ஒருவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து, நித்திய ஜீவனை அடைய நான் என்ன செய்ய



வேண்டும் என்று கேட்டான். இயேசு கிறிஸ்து அவனிடம் என் கட்டளைகளை பின்பற்றி நட என்று கூறினார். தான் கர்த்தருடைய எல்லா கட்டளைகளையும் சிறு வயதுமுதல் பின்பற்றி நடப்பதாக கூறினான். இயேசு கிறிஸ்து அவனிடமுள்ள பண ஆசையை அறிந்து, அவனிடம் இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு, உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்: பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார் (லூக்கா 18:22). அவன் கர்த்தரை நம்பாமல் பணத்தை நம்பினான்.

கர்த்தர், நியாயத்தீர்ப்பு நாளின்போது நல்லவர்களை தன் வலதுபக்கத்திலும், கெட்டவர்களை தன் இடதுபக்கத்திலும் நிறுத்துவார். நல்லவர்களைப் பார்த்து அவர் பசியாயிருந்தபோது ஆகாரம் கொடுத்ததாகவும், தாகமாயிருந்தபோது தாகத்தை தீர்த்ததாகவும், வஸ்திரமில்லாதபோது வஸ்திரம் கொடுத்ததாகவும், வியாதியாயிருந்தபோது விசாரிக்க வந்ததாகவும், காவலிலிருந்தபோது பார்க்க வந்ததாகவும் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட சகோதர சகோதரிகளுக்கும், ஊழியர்களுக்கும் கொடுத்து அவர்களுடைய தேவைகளை சந்திக்கும்போது, கர்த்தர் அதை தனக்கே செய்ததாகக் கூறுகிறார். இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் : சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதருக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் (மத்தேயு 25:4). நான் பசியாய், தாகத்தோடு, உடையில்லாமல், தேவையோடு இருந்தபோது நீங்கள் எனக்கு உதவி செய்யவில்லை என்பார்.

## திரும்ப கொடுக்க முடியாதவர்களுக்குக் கொடுத்தல்

நம்மில் அநேகர் நமக்கு உதவி செய்தவர்களுக்கும், நம்மை நேசிப்பவர்களுக்கும் நமக்கு வேண்டியவர்களுக்கும், சமுதாயத்தில் உயர்ந்த பதவியிலிருப்பவர்களுடைய நட்பு நமக்கு வேண்டும் என்பதற்காக அவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும்போது அதை அவர்கள் திரும்பக் கொடுப்பார்கள். இயேசு கிறிஸ்து தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி, நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்துஜனங்களையாகிலும், ஐசுவரிய முள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள். அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும், ஊனரையும் சப்பாணியையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்கு பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார் (லூக்கா 14:12-14). கர்த்தருடைய நோக்கம் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் கொடுப்பதே. அவர்களால்தான் நாம் கொடுத்ததை திரும்ப நமக்கு கொடுக்க முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு கொடுப்பவர் கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள். கர்த்தரிடமிருந்து அவர்களுக்கு பிரதிபலன் கிடைக்கும்.



கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் நாம் கொடுத்ததை நமக்கு திரும்பக் கொடுப்பவர் களுக்கும், ஐசுவரியவான்களுக்கும், வசதியோடு இருப்பவர்களுக்கும் கொடுக்கும்போது, ஆசீர்வாதத்திற்கு மாறாக சபிக்கப்பட்டவர்களாய் இருப்போம். கர்த்தரிடமிருந்து பிரதி பலன் கிடைக்காது. உண்மையான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள ஏழைகளுக்கும், தேவையோடு இருப்பவர்களுக்கும், ஊழியங்களுக் கும், உண்மையாய் கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கும் கொடுப்போம். இவர்களுக்கு கொடுப்பதையே நம் தேவன் விரும்புகிறார்.

அநேகர் மற்றவர்கள் தங்களை உயர்வாக நினைக்க வேண்டும், தங்களைப்பற்றி உயர்வாக பேசவேண்டும் என்பதற்காக கொடுப்பார்கள். இவர்கள் உண்மையான அன்போடு, இரக்கத்தோடு கொடுப்பதில்லை. சிலர் கடமைக்காகவும் மற்றவர்கள் தங்களை மதிக்கவேண்டும் என்பதற்காகவும் கொடுப்பார்கள். நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது (லூக்கா 16:15).

### ஒன்றுமில்லாதவர்களுக்கு கொடுத்தல்

ஏழைகளுக்கும், உண்மையாய் ஊழியம் செய்பவர்களுக்கும் கொடுக்காமல், இருப்பவர்களுக்கே கொடுத்து மனிதர்களைப் பிரியப்படுத்திக் கொண்டிருந்தோமானால், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் சாபத்திற்குள்ளாகி விடுகிறோம். பிரியமானவர்களே, இருக்கிறவர்களுக்கே கொடுங்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறவில்லை. ஒன்றுமில்லாதவர்களுக்கு கொடுங்கள் என்றே கூறுகிறது.

பின்னும் அவன் அவர்களை நோக்கி: **நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்..** (நெகேமியா 8:10). நாம் மற்றவர்களை நினைக்காமல், நம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்கிறவர்களாக, சுயநலமுள்ளவர்களாக இருக்கக்கூடாது. ஏழை, எளியவர்களையும், கர்த்தருக்காக உழைக்கும் பிள்ளைகளையும் நினைத்துப் பார்க்க வேண்டும். பண்டிகைகளை கொண்டாடும் சந்தோஷமான நாளில் கர்த்தர் நமக்கு கொடுத்த நன்மைகளை பகிர்ந்து கொடுக்கவேண்டும். உண்மையாய் கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கும், பரதேசிகளுக்கும், அநாதைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் தாராளமாக அவர்கள் திருப்தியடையும்படி சந்தோஷத்தோடு கொடுக்க வேண்டும் (உபாகமம் 26:11-13). அப்படி கொடுக்கும்போது தேவையோடு இருப்பவர்களுக்கு கொடுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. கர்த்தரின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறோம்.

**இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்** (லூக்கா 3:11). நம்மிடமுள்ளதை தேவையோடிருப்பவர்களுக்கு கொடுப்போம். இருப்பவற்றில் திருப்தியோடிருப்போம்.

கொடுக்கும்போது, மற்றவர்கள் அறியாதபடி கொடுக்கவேண்டும். உன் வலது கை கொடுப்பதை இடது கை அறியாதிருக்கக் கடவது. சுயநலமில்லாமல், எதிர்பார்ப்பில்லாமல் உண்மையான அன்போடு கொடுக்க வேண்டும்.

திருமணங்களில் மற்றவர்கள் கொடுத்ததை திரும்பக் கொடுப்பதற்காக மொய் எழுதிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் கொடுப்பதில் ஒரு காரணம் உண்டு. சுயநலத்தோடு, கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும் என்ற நோக்கத்தோடு கொடுப்பார்கள். இதில் உண்மையான அன்பு இல்லை.

### கர்த்தருடைய ஊழியங்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் கொடுத்தல்

கர்த்தர் நமக்கு சம்பாதிப்பதற்கான பெலன், சுகம், ஜீவன் கொடுத்திருக்கிறார். நாம் வைத்திருக்கும் ஒவ்வொரு பொருட்கள், பணம் எல்லாம் கர்த்தருடையது. நமக்கு சொந்தமானதல்ல, கர்த்தர் நமக்கு இந்த உலகத்தில் பயன்படுத்தும்படி கொடுத்தவை. அதை கையாளும் பொறுப்பை நமக்கு கொடுத்திருக்கிறார். ஆதலால் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்.

**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்** (மல்கியா 3:10). பத்தில் ஒரு பாகத்தை ஊழியங்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கவேண்டும். அநேகர் வருமானத்தில் பத்தில் ஒரு பாகத்தை கர்த்தருக்கு கொடுப்பதில்லை. கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ, அதற்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் நம்மேல் கடந்து வரும். அதைக் கொடுக்காமல் கர்த்தரை ஏமாற்றும்போது, கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தை இழந்துபோவோம். நம்மில் அநேகர் நம் செலவுபோக, மீதியுள்ள பணத்தை கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கிறோம்.நாம் முதல் பாகத்தை கர்த்தருக்கு கொடுக்கும்போது, பணத்தை கையாள ஞானத்தை தருவார், ஆசீர்வதிப்பார்.

கர்த்தருடைய ஊழியத்தை

செய்பவர்களுடைய தேவைகளை அறிந்து சந்திக்கப்படவேண்டும். லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்படவில்லையென்பதை நெகேமியா கேள்விப்பட்டு, அதைக் கொடுக்கும்படி ஜனங்களுக்கு கண்டித்து உணர்த்தினான். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஊழியத்துக்கு தாராள மனதோடு கொடுக்கவேண்டும். உண்மை ஊழியர்களின் தேவைகளை அறிந்து, ஏற்றவேளையில் உதவி செய்யவேண்டும். நாம் அவர்களுக்கு ஆதரவாக, உதவியாக, அவர்களது பாரத்தை தாங்குகிறவர்களாக, அவர்களை ஊக்குவிக்கிறவர்களாக, வாஞ்சை, விருப்பங்களை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். இவைகளை அறிந்தும், தசமபாகம் கொடுக்காமல் இருந்தோமானால், கர்த்தருடைய கோபத்துக்குள்ளாவோம். நெகேமியாவோ கர்த்தருடைய ஊழியர்களின் தேவைகளை சந்திக்கப்படாததை அறிந்து, அவர்களுக்குரியதை கிடைக்கச் செய்தான் (நெகேமியா 13:10-12)

இந்த உலகத்திலுள்ள எல்லா வேலையைக் காட்டிலும் மிகச் சிறந்த வேலை கர்த்தருக்கு ஊழியம் (சேவை) செய்வதுதான். அவர்கள் செய்த ஊழியத்திற்கு ஏற்ற கூலியை கொடுக்க வேண்டும். கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்து ஜெபித்து, ஜனங்களுக்கு ஏற்ற வார்த்தையை பெற்றுதரும் ஊழியர்களை கனப்படுத்த வேண்டும். அவர்களை வருத்தப் படுத்தவோ, துன்பப்படுத்தவோ கூடாது. அவர்களை மனநிறைவோடு, சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும்.

கர்த்தருக்காக உழைக்க, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியக்காரர்களையும், அவர்களுடைய ஊழியங்களையும் தசமபாகங்களினால் தாங்க முன்வரவேண்டும். இஸ்ரவேலர், லேவியர்களுக்கும் ஆசாரியர்களுக்கும் தங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கொடுத்து அவர்களை தாங்கினார்கள். விளைச்சல்களில் பத்தில் ஒரு பங்கையும், ஆட்டு மந்தைகளையும், நிலங்களையும் கொடுத்தார்கள். நாமும் அவர்கள் தேவைகள் அனைத்தையும் கொடுத்து அவர்களைத் தாங்க கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிக் கொடுக்கும்போது, அவர்கள்எந்தவிதபாரமுமில்லாமல் கர்த்தருடைய ஊழியத்தை தடையில்லாமல், விடுதலையோடுகூட செய்ய முடியும்.

லேவியருக்கு குடியிருக்க பட்டணங்களையும், நிலங்களையும் கொடுக்கும்படி, கர்த்தர் இஸ்ரவேலருக்கு கட்டளையிட்டார் (எண்ணாகமம் 35:2). **இஸ்ரவேல் புத்திரர் சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாகக் கொடுத்தார்கள்** (2 நாளாகமம் 31:5). எசேக்கியா ராஜா தசமபாகத்தை கொடுக்குமாறு ஜனங்களுக்கு கட்டளையிட்டான். ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய பணிக்கென்று தாராளமாய் மனமுவந்து கொடுக்க வேண்டும் (2 கொரிந்தியர் 8:9). நாம் கர்த்தருக்கென்று கொடுக்கும்போது, பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறோம்.

கர்த்தருக்கென்று கொடுப்பதற்கு அநேகருக்கு மனதே வராது. அதையும் சேர்த்து வைக்கலாம் என்று நினைப்பார் கள். கர்த்தருக்கு (ஊழியம்



செய்பவர் களுக்கு) கொடுப்பதை மனிதர்களுக்கு கொடுப்பதாகவே நினைக்கிறார்கள். அதனால் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியாது.

அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா நாட்டுச் சபைகளைக் குறித்து இப்படியாகக் கூறுகிறான்: **அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்** (2 கொரிந்தியர் 8:2,3). அவர்கள் சந்தோஷத்தோடு, உதாரத்துவ குணத்தோடு கொடுத்தார்கள். நாம் கர்த்தருடைய ஊழியர்களுக்கு இப்படியாகக் கொடுக்கிறோமா? நாம் தாராள மனதோடு கொடுக்கும்போதுதான் நாம் மிகுதியாக பெற்றுக்கொள்ள முடியும்.

**கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்** (லூக்கா 6:38). இயேசு கிறிஸ்துவை முழுமையாக அறியாத உலகப் பிரகாரமான மக்கள் மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, தனக்குள்ள பணம் எல்லாம் குறைந்துவிடும், தங்களுக்கு ஒன்றுமே இருக்காது என்று நினைக்கிறார் கள். நாம் கொடுக்கும்போதுதான் நமக்கு கொடுக்கப்படும் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது.



தேவையோடு இருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளின் தேவைகளை நாம் சந்திக்கும்போது; அவர்கள் உள்ளம் சந்தோஷமடைந்து, தேவனுக்கு நன்றி சொல்வார்கள். நமக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்பார்கள். உதாரத்துவமாய் கொடுக்கும்போது, அதன் பலனை சம்பூரணமாய் பெற்றுக்கொள்வோம்.

அநேகர் கர்த்தருக்கு தாராள மனதுடன் கொடுக்க தயங்குவார்கள். ஏனென்றால், கர்த்தருக்கு கொடுத்து விட்டால், மீதியுள்ள பணத்தை வைத்து தங்களுடைய தேவைகளையெல்லாம் சந்திக்க முடியாது என்று நினைப்பார்கள். கர்த்தருக்கு கொடுக்கும்போதுதான் கர்த்தரால் உங்கள் தேவைகளைசந்திக்க முடியும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையினருக்கு நம்பிக்கையூட்டினார்.

போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்றும் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே. கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு அதற்கேற்ற கூலி கொடுக்கப்பட வேண்டும். நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திருவசனத்திலும்,



உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும் (1 தீமோத்தேயு 5:17,18), ஊழியக்காரர்கள், கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு விளக்கி, போதிப்பதன் மூலம் உழைப்பவர்களாய் இருக்கிறார்கள். அப்படி உழைப்பவர்களுக்கு அதற்கேற்ற கூலி கொடுக்கப்பட வேண்டும். உலக பிரகாரமாக வேலை செய்யும் அநேகர் தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிப்பதாகவும், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உழைக்காமல் சம்பாதிப்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது கர்த்தருடைய வார்த்தைக்கு எதிரானது. கர்த்தருக்காக உழைப்பவர்களை மதிக்கவேண்டும். அவர்களை அற்பமாக எண்ணக்கூடாது. இரட்டிப்பாக கனம் பண்ண வேண்டும். அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார் (1 கொரிந்தியர் 9:14).

### தேவன் மேலுள்ள அன்பினால் கொடுப்போம்

நாம் பாவி என்பதை உணர்ந்து நம்மை தாழ்த்தி, நம் பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, மனந்திரும்பி பரிசுத்த உள்ளத்தோடு, தேவ அன்பில் நிறைந்து கொடுக்கும் காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கிறார். சடங்காச்சாரமாக, கடமைக்காக மற்றவர்கள் தன்னை பெருமையாக பேசவேண்டும் என்பதற்காக கொடுக்கும் காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார். கர்த்தரை நேசிக்காமல், அவருடைய வார்த்தையின்படி நடக்காமல், கர்த்தருக்கும் நமக்கும் ஐக்கியமில்லாமல், தங்களை தாழ்த்தாமல், சுயநீதியோடு இருந்து கொண்டு கொடுக்கும் காணிக்கை வீண். நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியமல்ல. நமக்கு இருப்பதிலிருந்து என்ன மனப்பான்மையோடு கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

மக்கெதோனியா சபைகளிலுள்ளவர்கள் ஏழை விசுவாசிகளாயிருந்தும், மகிழ்ச்சியுடன், உதாரத்துவமாய் கொடுத்தார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். தியாகத்தோடு கொடுத்தார்கள். ஊழியர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை இருந்தது. இவர்கள் எப்படி மனஉற்சாகத்தோடு கொடுத்தார்களோ அதுபோல நாமும் கொடுக்க கர்த்தர் வாஞ்சிக்கிறார். **சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** (2 கொரிந்தியர் 9:6,7).





# கர்த்தருடைய ஆராய்ந்து அறியமுடியாத வழிகள்

**ஏஞ்ஜலின் தீப்தி**

**உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்** (பிரசங்கி 3:11). கர்த்தருடைய வழிகளும், செயல்பாடுகளும் அநேக சமயங்களில் புரிந்து கொள்ள முடியாது. நடக்கும் காரியங்கள் செல்லும் போக்கும் புரிந்துகொள்ள முடியாது. காரியங்கள் ஏன் இப்படி நடக்கின்றது என்று நாம் யோசிக்க ஆரம்பித்தோமானால் நமக்கு விளக்கம் கிடைக்காது.

**நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்** (சங்கீதம் 115:3). கர்த்தர் செய்யும் காரியங்களுக்கு, அவர் யாருக்கும் பதிலளிக்கத் தேவையில்லை. ஆனாலும், அவர் எதிர்காலத்தில் இருப்பதைக்குறித்து தமது தீர்க்கதரிசிகளுக்கும் மற்றும் அப்போஸ்தலர்களுக்கும் வெளிப்படுத்துகிறார். இருந்தாலும், அவர் முழு விவரத்தையும் தருவதில்லை. நாம் பார்ப்பதெல்லாம், சிறு சிறு துண்டுகளாக வெட்டியெடுக்கப்பட்டு மீண்டும் இணைத்துப் பொருத்தப்படும் படம் போலத்தான்; அதை நாம் அறிந்து கொள்ள முடியாது. ஒரு பனிப்படலத்தின் மூலம் பார்ப்பதுபோல இருக்கும். சேருமிடத்தைக்குறித்த நிச்சயம் நமக்கு இருந்தாலும், அடுத்த அடியில் என்ன இருக்கும் என்ற நிச்சயம் நமக்கு இருக்காது.

**இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்** (1 கொரிந்தியர் 13:12). இது, கர்த்தருடைய திட்டத்தையும் நோக்கத்தையும் மொத்தமாக வெளிப்படுத்தும் வாக்குத்தத்தமாகும். ஆனாலும், இப்பொழுதும், கர்த்தருடைய சில செயல்பாடுகளைக்குறித்து நாம் அறிந்து கொள்ளமுடியாதபடி இருளில் இருக்கிறவர்களைப்போல இருக்கிறோம். அநேக சமயங்களில் நமக்கு, கட்டிறுக்கமான வளைவு

களுடன் மேலும் கீழுமாக மற்றும் சுற்றுப் போக்காக அமைந்துள்ள குறுகலான பாதையில் ஒரு ஊர்தியில் (ரோலர் கோஸ்டர்) செல்வதுபோல நாம் மேல்நோக்கி செல்வோமா அல்லது ஆழமான விழுதலுக்குப் போவோமா அல்லது தலைகீழாக சுழலுவோமா என்று நம்மால் அறிந்து கொள்ளவே முடியாது.

**நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது** (1 கொரிந்தியர் 13:9). என்றென்றைக்குமுள்ள உலகத்திற்குள் நாம் பிரவேசிக்கும்பொழுதுதான், நாம் எல்லாவற்றைப்பற்றியும் முழுமையாக அறியமுடியும். அப்பொழுது நாம், வாழ்க்கையில் புரிவதற்குக் கடினமாக இருந்த, தெளிவில்லாதிருந்த காரியங்களையெல்லாம் அறிந்து கொள்ள ஆரம்பிப்போம். வாழ்க்கையில் நமக்கேற்பட்ட பதில் கிடைக்காத கேள்விகளுக்கெல்லாமான பதில்களை அந்த உலகத்தின் பக்கம் சென்றபின் புரிந்து கொள்ள ஆரம்பிப்போம். இப்படித்தான் கர்த்தர் காரியங்களை வடிவமைத்திருக்கிறார். நாம் மாம்சத்திலிருக்கும் வரை அவருடைய வழிகள் நமக்கு மர்மமாகவே இருக்கும்.இது ஏனென்றால், நாம் அவரிடம் ஜெபிக்கும் பொழுது, அவர் நாம் எதிர்பார்த்தபடி பதில் கொடுக்கிறார் அல்லது அவருக்கே உண்டான வழியில் அநேக சமயங்களில் பதில் கொடுக்கிறார்.

**இதோ, தேவன் மகத்துவமுள்ளவர்; நாம் அவரை அறிய முடியாது; அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது** (யோபு 36:26). மனுஷ அறிவினால் பிடித்துக் கொள்ளவும் கிரகிக்கவும் முடியாத அளவு கர்த்தர் பெரியவர். அவருடைய வழிகளை கண்டுபிடிக்க முடியாது. யோபு தன் துன்பத்தில் தான் பிறந்த நாளை சபிக்கிறான். ஆனால், கர்த்தருக்கு எதிராக அவனிடத்தில் ஒன்றுமில்லை. அவனை ஆறுதல்படுத்த வந்த அவனுடைய நண்பர்கள் அவனது பாவங்களின் விளைவே அவனது நிலைமைக்குக் காரணம் என்றும், கர்த்தரைக் காட்டிலும் தன்னை நீதிமானாக்க முயற்சி செய்தான் என்றும் சொல்ல முயற்சி செய்தார்கள். ஆனால் யோபிற்கு விடுதலை வந்தது, கர்த்தர் அவனை சந்தித்து அவரது படைப்புகளின் வியப்புகளை காண்பித்தபோது. அப்போதுதான் யோபு கர்த்தரின் மகத்துவத்தை உணர்ந்து இப்படியாக அறிக்கை செய்தான்: **''தேவரீர் சலகத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்''** (யோபு 42:2). அவனது சூழ்நிலைகள் மாறினது.

**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்** (ஏசாயா 55:8). இங்கு ஏசாயா, கர்த்தர் எல்லா சட்ட திட்டங்களுக்கும், எல்லைகளுக்கும் அப்பாற்பட்டவர் என்று குறிப்பிடுகிறார். அவருடைய வழிகள் மகத்துவமானவைகள். மேலும் தொடர்ந்து ஒவ்வொரு தடவையும் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குவார். அவர் மோசேயோடு பேச நினைத்த பொழுது, ஒரு எரிகிற முட்செடியில் தோன்றினார். பவுல் தன்னை எல்லா அப்போஸ்தலருக்கெல்லாம் கடையானவனாக கருதியபொழுது, அவனை புறஜாதிகளுக்கு என்று தனது வல்லமையுள்ள ஊழியக்காரனாகத் தெரிந்தெடுத்தார். போர்முனைக்கே சென்றிராத தாவீதை, வல்லமைமிக்க இராட்சதனை தோற்கடிக்கக் கர்த்தர் பயன்படுத்தினார்.



**மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறனுக்கு ஐயோ! களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி: என்ன செய்கிறாயென்று சொல்லத்தகுமா? உன் கிரியையானது: அவருக்குக் கைகள் இல்லையென்று சொல்லலாமோ?** (ஏசாயா 45:9). ஆகவே, நாம் அவரை கேள்வி கேட்கும்போது அவர் பிரியப்படுவாரா?

**ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம் அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள் அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருடைய ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?** (ரோமர் 11:33,34). அப்போஸ்தலனாகிய பவுல், ஒருவரும் கர்த்தருடைய சிந்தையை அறிந்து கொள்ள முடியாது என்றும், அவர் என்ன செய்யப் போகிறார் என்று கணிக்கவும் முடியாது என்று சொல்லுகிறார். இங்கே அவர் சொல்ல வருவது, கர்த்தர் செய்யும் எல்லா காரியங்களையும் நாம் புரிந்து கொள்ள முயற்சி செய்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றே நான் உணருகின்றேன். அவர் மனித அறிவு புரிந்து கொள்வதற்கும், கிரகிக்க முடிவதற்கும் அப்பாற்பட்டவர். ஆகவே, அவரை கேள்வி கேட்பதையும் காரணங்களை கேட்பதையும் விட்டுவிட்டு, அவரை முழுமையாக நம்பி, சார்ந்து இருப்பதையே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். அவர் நமக்காக வைத்திருக்கிற ஆராய்ந்து முடியாத வழிகளில் நாம் வாழவும், மகிழ்ச்சியாக இருக்கவும் விரும்புகிறார்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் :** S.PAULRAJ KENNEDY

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

# கர்த்தர் யாரிடம் எப்படி பேசுவார்?

பால்ராஜ் கென்னடி

**- தொடர்ச்சி..**

5. ஒரு மனிதனோடு கர்த்தர் அதிகமாக அல்லது தொடர்ந்து இடைபடவேண்டுமானால், அந்த மனிதன் வேதத்தை நன்கு படிக்க வேண்டும். அதிகமாகப் படிக்க வேண்டும். வேதத்தின் வார்த்தையை வைத்துத்தான் கர்த்தர் நம்மோடு இடைபடமுடியும். வேதம்தான் கர்த்தருக்கும் நமக்கும் உள்ள உறவு. கர்த்தர்மேல் அலாதியான தாகம் வேண்டும். கர்த்தர் சொல்லுவதை உடனுக்குடன் எழுதுபவனாக இருக்கவேண்டும். அவருடைய வார்த்தையை கனப்படுத்துபவனை அவர் கனப்படுத்துவார். கர்த்தர் சொல்லுவதை மாத்திரம் சொல்ல வேண்டும். கர்த்தர், சொல் என்று சொன்னால் மாத்திரம் சொல்பவனாக இருக்க வேண்டும். முழுமையாகக் கர்த்தருடைய ஆளுகைக்குள் இருக்க வேண்டும். அதற்கு முழுமையான அர்ப்பணம் அவசியம். ஞானமாய் இருக்கவேண்டும். குழந்தைத்தனம் கூடாது. ஆவியில் வளர்ச்சி, முதிர்ச்சி வேண்டும். எந்த அளவு நாம் ஆவியில் வளர்ந்துள்ளோமோ அந்த அளவு கர்த்தர் நம்மோடு இடைபடுவார், வெளிப்பாட்டைத் தருவார்.

6. அவருடைய சித்தத்தை அறிந்து, அதன்படி செய்கிறவனிடத்தில், தம் இருதயத்திலுள்ளவைகளை கர்த்தர் வெளிப்படுத்துவார். பிரசங்கங்கள் எல்லாமே கர்த்தருடைய சிந்தையையும், சித்தத்தையும் வெளிப்படுத்தவே. *(அப்போஸ்தலர் 13:22, 1 சாமுவேல் 13:14, அப்போஸ்தலர் 22:14).*

எரேமியா 22:16, ஏசாயா 58:6-14 இவைகள் சொல்வது: ஏழை, எளிய ஜனங்களின்மேலும், ஆவியில் நொறுங்குண்ட ஜனங்களின் மேலும் பரிதபிக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருப்பார்.

7. தாழ்மையாய் இருக்கிறவனுக்கு தம்முடைய இருதயத்தை வெளிப்படுத்துவார். எனக்கு எல்லாம் தெரியும் என்ற மனப்பான்மை உள்ளவனுக்கு, கர்த்தர் எதையும் வெளிப்படுத்தமாட்டார். கர்த்தர்தான் எனக்கு எல்லாம் என்று வெறும் வாயினால் சொல்பவனிடமும் கர்த்தர் எதையும் வெளிப்படுத்தமாட்டார். ஏனென்றால், அவனது செய்கைகள் எல்லாம் சுயமாக செய்துகொண்டிருப்பதாக இருக்கும். *(ஏசாயா 66:2)*

8. கர்த்தர், ஒவ்வொருத்தரையும் நடத்துவது வித்தியாசமாக இருக்கும். எல்லோரையும் ஒரேவிதத்தில் நடத்தமாட்டார். சில ஆடுகளை மேய்ப்பன் தொட்டால்போதும், அவைகள் புரிந்துகொள்ளும். சில ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தைக் கேட்டால் போதும், சில ஆடுகளை கம்பினால் தொடவேண்டும். எனவே, கர்த்தர் ஒரு மனிதனை எப்படிப் பார்க்கிறார் என்பதை முதலாவது கர்த்தரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். இது மிக மிக அவசியம். அப்போதுதான் அவர்களைக் குறித்த தானக் காரியங்கள், கர்த்தரிடமிருந்து ஒரு அருவியைப்போலக் கொட்டும். இலகுவாக, தைரியமாக தீர்க்கதரிசனம் சொல்லலாம்.

9. கர்த்தரிடமிருந்து, இசையை, பாடல்களை, உதாரணங்களை கேட்டு வாங்கலாம். ஏற்கனவே கர்த்தர் மற்றவர்களிடம் கொடுத்துள்ளவற்றை நாம் நன்கு கவனிக்க வேண்டும்.அப்போதுதான் கர்த்தர் அவற்றைவைத்து நம்மிடம் இதை இப்படிச் செய், இதை அப்படிச் செய்யாதே என்று சொல்லிக் கொடுக்கமுடியும். மேலும், ஏற்கனவே கர்த்தர் அவர்களை வைத்து செய்துள்ளதை நாம் மறுபடி செய்யாமல் இருக்க அது வசதியாக இருக்கும். கர்த்தரிடம் ஆலோசனை கேட்கும்போது அவர் பிரியப்படுவார் (1.சுயமாய் செய்யாமல் இருக்க விரும்புகிறோம் என்பதைக் கர்த்தர் பார்ப்பார். 2.செய்ததையே மறுபடி செய்யாமலிருக்க விரும்புகிறோம் என்பதைப் பார்ப்பார். 3. எல்லாவற்றுக்கும் மேலாக உச்சிதமானதை செய்ய விரும்புகிறோம் என்பதைப் பார்ப்பார்).

10.ஏதோ நானும் (எல்லோரையும்போல) ஒலித் தட்டு, ஒளித் தட்டு வெளியிடுகிறேன் என்றோ, நானும் (மற்றவர்களைப்போல) பிரசங்கம் பண்ணுகிறேன் என்றோ இருந்தால், கர்த்தரிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள அந்த நோக்கமே தடையாகி விடும். உன்னைக் கண்டவன் என்னைக் காணவேண்டும் என்பதே கர்த்தருடைய வாஞ்சை. நம் மூலமாகத் தம்மை வெளிப்படுத்த கர்த்தர் விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவே தேவனின் வெளிப்பாடுதான். நாம் பேசுவது, பிரசங்கிப்பது, ஜெபிப்பது, பாடுவது, இசைக் கருவிகளை மீட்டுவது, வாழ்வது - எல்லாமே இயேசுவை வெளிப்படுத்தவேண்டும். இதுவே தேவனுக்கு நாம் மகிமை செலுத்துவதாகும். சுய மகிமை வராது.

**- தொடரும்**